***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.164/2021 – P.W. 8 (Add W)***

| | |
|---|---|
| *Name* | மருத்துவர் திரு. தேவேந்திரன் (உதவி பேராசிரியர்) |
| *Father/Husband's Name* | ராஜேந்திரன் |
| *Village* | செய்யாறு |
| *Taluk* | *செய்யாறு* |
| *Religion* | |
| *Age* | *37* |

எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day* ***09.03.2026***

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 08.10.2020 ம் தேதியன்று திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த சமயத்தில் அன்று இரவு 11.30 மணியளவில் திருவாரூர் தாலுக்கா, வேலங்குடி, பெரியார் தெரு, பைரவசுந்தரம் என்பவரது மகன் பூப்பாண்டியன் வயது 35 என்பவர் அவரது மனைவி நித்யா அவர்களால் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவர்களின் கூற்றுப்படி அவரை 4 அடையாளம் தெரியாத ஆண் நபர்கள் உருட்டு கட்டை மூலம் அன்று இரவு 9.30 மணியளவில் புனவாசல் மெயின் ரோட்டில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது தலையின் வலது பக்கத்தில் 4x2x1 cm அளவிலான பிளவு காயம் இருந்தது. மேற்கண்ட விவரங்களை நான் மருத்துவமனையின் விபத்து பதிவேட்டில் 5824 26 என்ற எண்ணில் பதிவு செய்து, அவரை மேல்சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதிக்க பரிந்துரை செய்தேன். (**விபத்து பதிவேடு அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

2. கடந்த 01.03.2023 ம் தேதியன்று மேற்படி காயம்பட்ட நபர் எனது பரிந்துரையின் அடிப்படையில் அவர் சிகிச்சையில் சேராமல் வெளியே சென்றுவிட்ட

காரணத்தினால் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து கருத்து வழங்க இயலாது என்று மேற்குறிப்பு செய்தேன். **(கருத்துரை வழங்க இயலாது என வழங்கப்பட்ட மேற்குறிப்பு அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் வழங்கிய விபத்து பதிவேட்டில் காயத்தின் வயது மற்றும் நிறம் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் அவரை பரிசோதித்தபோது கழுத்து பகுதியில் எவ்வித காயமும் இல்லை என்றால் சரிதான். அவருக்கு ஏற்பட்ட காயத்தில் ரத்த ஒழுகல் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சட்டம் சார்ந்த மருத்துவம் தொடர்பான காயத்தின் தன்மைக்கும், எங்களது மருத்துவர்கள் சொல்லும் காயத்தின் தன்மைக்கும் உண்டான வித்தியாசம் தெரியும். அவ்வாறு இருக்கையில் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 320-ல் சொல்லியுள்ள காயங்கள் தொடர்பான விவரங்கள் பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான்.

2. சட்டம் சார்ந்த மருத்துவம் தொடர்பான காயம் குறித்தும், அதன் தன்மை குறித்தும் என்னால் இந்த விபத்து பதிவேட்டை பொறுத்து என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். இந்த தொடர்பாக போலிசார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள். ஆயுதங்கள் எதையும் காட்டி என்னிடம் விசாரணை செய்யவில்லை. போலிசார் என்னை எந்த தருணத்திலும் விசாரிக்கவில்லை என்றாலும், நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 09.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.